விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 13 முஹர 24 இதழ் 231

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-9-1986


## "மூதூரில் புலிகளின் 'சூழ்ச்சிபொறி'க்கு 3படையினர்பலி;பலர் காயம்'

யாழ்ப்பாணம், திங்கள்

மூதூர் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமிலிருந்து 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் வைத்த சூழ்ச்சிப் பொறியில் சிக்கியதால் இராணுவத்தினரில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமுற்றனர்.

நேற்றுக்காலை இச் சூழ்ச்சிப் பொறித் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

நேற்றுக் காலை 7 மணியளவில் கட்டைப்பறிச்சான் இராணுவமுகாமில் இருந்து நடந்து வந்த 50 மேற்பட்டஇராணுவத்தினர் முகாமிலிருந்து 300 யார் தொலைவில் உள்ள இறுல் பாலத்திற்கு வந்த சமயம், அங்கு எம்மால் முன்

[8ம் பக்கமும் பார்க்க]

● வெலிக்கடை, பூஸா உண்ணுவிரதிகளுக்கு ஆதரவாக

# நாளைய ஊர்வலத்தில் சகல மாணவர்களும் பங்குபற்றுவர்

## மாணவர் அமைப்புகளின் கூட்டமைப்புமுடிவு

(அலுவலக நிருபர்)

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, வெலிக்கடை சிறையிலும், பூஸாமுகாமிலும் எந்தவித விசாரணையுமின்றி தடுத்துவைக்கப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகும் தமிழ்ச்சிறைக் கைதிகள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரி சாகும்வரை உண்ணுவிரதம் இருப்பதற்கு அனுதாபமும், ஆதரவும் தெரிவித்து நாளை 30 திகதி பொதுமக்களுடன், மாணவர்களும் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தவுள்ளனர்.**

சிறைக் கைதிகளின் சாகும் வரை உண்ணுவிரதப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கான மாணவ அமைப்புகளின் கூட்ட்ம் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது:

இக்கூட்டத்தில்சகலவிடுதலை ஸ்தாபனங்களின் மாணவர் அமைப்புகளும் ஏனைய மாணவர் அமைப்புகளும் கலந்து கொண்டன.

இக்கூட்ட முடுவின் பின்னர் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது: அவ்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளதாவது:

''சிறைச்சாலைகளில் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்ச் சிறைக் கைதிகள் 18வது

(8ம் பக்கம் பார்க்க)

## மின்விநியோகம் காரைநகர் முகாமில் துண்டிக்கப்பட்டது

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்.

காரைநகர் கடற்படைமுகாமிற்கான மின் விநியோகத்தைத் தாம் துண்டித்துள்ளதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' [ஈ. பி. ஆர். எல். எவ்.) அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஈ.பி.ஆர். எல். எவ். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!-

''எமது நிலத்தில் ஆக்கிரமிக்கும் நோக்குடன் முகாமிட்டுள்ள சிறீலங்கா அரச படையினரைத் தொடர்ச்சியான தாக்குதல்கள்மூலம் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கச்

[8-ம் பக்கம் பார்க்க]

## சக இயக்க முகாமை முற்றுகையிட்ட ராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், திங்கள்:

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள கணுக்கேணியில் விடுதலை இயக்கம் ஒன்றின் முகாமொன்றை முற்றுகையிடவந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் உக்கிரமான எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் சேதங்களுடன் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதற் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்றுக் காலை 6 மணியளவில் முள்ளியவளைக்கு அண்மையில் உள்ள கணுக்கேணியில் சக இயக்கத்தினரின் முகாம் ஒன்றை முற்றுகையிட நேற்று முன்தினம் இரவோடிரவாக முல்லைத்தீவு முகாமிலிருந்து உடும்பன்குளம் வழியாக நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வந்து குறிப்பிட்ட விடுதலை இயக்க முகாமைத் தாக்கத் தொடங்கினர். இதனையறிந்த எமது வீரர்கள் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து இராணுவத்தினர் மீது பலத்த நேரடித் தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் இராணுவத்தினர் பின்வாங்கத் தொடங்கினர்.

பின்வாங்கிய இராணுவத்தினரை எம்மவர்கள் 3ம் கட்டைவரை துரத்திச் சென்றனர். இச்சம்பவத்தின்போது

[8ம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்

சிறைச்சாலைகளில் சாகும் வரை உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவ நிர்வாகக்குழு, தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றியும் தற்போதைய நிலைகுறித்தும்ஆராய்வதற்கென பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை கூட்டமொன்று நடத்வுள்ளது.

இதேவேளை ஐந்தாவது நாளாக இன்று பல்கலைக்கழகத்தில் உண்ணுவிரதம் நடப்பது குறிப்பிடத்தக்கது. [ரா]

## உள்ளூர் ஒளிபரப்பில் அரசியல் கைதிகள் விவரணப்படம் 'வேள்வி'

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்பேசும் அரசியல் கைதிகள் சம்பந்தமான விவரணப் படம் ஒன்றை தொலைக்காட்சி மையம் வெளியிட்டுள்ளது.

'வேள்வி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இப்படத்தில் பூஸாவிலிருந்து விடுதலையான ஒருவரின் பேட்டி உட்பட முக்கிய பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன,

நேற்று யாழ். நகரின் சில பகுதிகளில் இப்படம் ஒளிபரப்பப்பட்டது. இன்றும் நாளையும் பி. ப. 2 மணிக்கும் மாலை 6 மணிக்கும் யாழ். நகர் முழுவதும் ஒளிபரப்பாகும் என்றும் ஒருவாரத்துக்குள் மற்றும் பகுதிகளிலும்

(8-ம் பக்கம் பார்க்க


மிது வீடியோ மூவிசாரின்

## நேற்றைய வெளியீடுகள்

(1) விஸ்னுவர்த்தன், துவாரகேஷ் நடித்த
ராஜமோகினி

(2) கார்த்திக், இளவரசி, விசு நடித்த
அவள் சுமங்கலிதான்
(Pyramid Master)

(3) சுரேஷ், ஜீவிதா, ஜெய்சங்கர் நடித்த
ஜோதிமலர்
(Pyramid Master)

மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி - சித்தன்கேணி.

[C 4903]


## இன்று பாடசாலைகளில் பிரார்த்தனை செய்ய வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

சிறைச்சாலைகளிலும்,தடுப்பு முகாம்களிலும் நீதிகோரி உண்ணுவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க்கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று யாழ். குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர்கள் மாணவர்களை ஒரு மணித்தியாலம் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு இ. த. ஆ.

[8-ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் மீண்டும் திருமலை அகதிகள்

முல்லைத்தீவு, ஞாயிறு

திருமலையிலிருந்து பெருந்தொகையான அகதிகள் கடல் மார்க்கமாக முல்லைத்தீவுக்கு வருகை தந்துள்ளனர். சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200க்கும் அதிகமான அகதிகளே இவ்வாறு வந்தடைந்துள்ளனர்.

சாம்பல்தீவு,கோபாலபுரம், குச்சவெளிப் பகுதியில்இருந்து வந்துள்ள இவ்வகதிகள் இராணுவத்தினரின் கொடுமைகாரணமாகவே தாம் தமது பூர்வீக மண்ணைவிட்டு வந்ததாக கூறினர்.

கள்ளப்பாட்டிலும், முல்லைத்தீவு மாதா கோவிலிலும் தற்பொழுது இவ்வகதிகள் தங்கியுள்ளனர். (ரா)

## அன்னையர் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

வெலிக்கடையிலும் பூஸாவிலும் உண்ணுவிரதம் இருக்கின்ற இளைஞர்கள், யுவதிகளுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் உண்ணுவிரதத்தில் சகல தாய்மார்களையும், பெண்களையும் நாளை 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வந்து பங்குபற்றுமாறு அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்புத்துறை 21/3, சுவாமியார் வீதியில் அமைதியான சூழலில் வீடு கட்டக்கூடிய பிரத்தியேக பாதையுள்ள $1\frac{1}{2}$ பரப்புக் காணி சதுரமாக அல்லது நீள்சதுரமாக உடன் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடாலம். [C 4885]

நல்ல நிலையிலுள்ள ஆட்டோ விற்பனைக்குண்டு நேரில் வரவும். 15/11, 1-வது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [C 4878]

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4800

வீட்டுத்தளபாடங்கள், பியானோ, புத்தகஅலுமாரி, National Blender, English கரண்டி கத்திசெற், English Tea Set, Pyrex, Teak சாப்பாட்டு மேசைகள், பியானோ எக்கோடியன், மினி மிக்சர், மேசை மணிக்கூடுகள், Brief case, Mosqito Lamp, English glass ware, விருந்தை கதிரைகள், Rice cooker, Oven, Bread Toaster, மற்றும் பல உடன் விற்பனைக்கு. 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம். St. Charles பாடசாலையருகில் C 4847

பலவித வீட்டுத்தளபாடங்கள், நாஷனல் கசற்றேடியோ, Toshiba கசற், Pyrex வகைகள், கிளாஸ் வகைகள், Hall செற்கள், கட்டில் மெத்தைகள், Formica சாப்பாட்டு மேசை கதிரைகள், கண்ணாடிமேசைகள், கண்ணாடி அலுமாரிகள், Show Case, Bread Toaster, Usha தையல் மெஷின், Pressure Cooker, Cyntex Lamps, Lamp Shades, Verandah கதிரைகள், மற்றும் பல உடன் விற்பனைக்கு. M. Thiagarajan 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், St. Charles பாடசாலை அருகில். [C 4813]

H P. 3000 Sony Vedio Camara விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: வ. றவீந்திரன். 134, கச்சேரி-நல்லூர் றோட். நல்லூர், யாழ்ப்பாணம். [C-4895]

இருபாலையில் கோண்டாவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- த சிவபாதம், கோண்டாவில் றோட். இருபாலை, கோப்பாய். (C-4887)

$2\frac{1}{2}$ பரப்புக்காணி மாவத்தை றோட், வேப்பியனை. அராலி தெற்கு, அராலியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்; திருமதி வள்ளிப்பிள்ளை சதாசிவம், அம்பனை சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். [C-4891]

## தேவை

பொறியியலாளர் பிறநாட்டு மனைவியுடன் வசிப்பதற்கு சிறிய வீடு கொக்குவிலில், திருநெல்வேலி, ஆனைக்கோட்டை சூழலில் வாடகைக்கு எதிர்பார்க்கிறார். தொடர்பு: பாண்டியன், 'ஊற்று' மாரியம்மன் கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [C-4902]

அப்பம், றொட்டி தயாரிக்கக் கூடியவரும், சப்பளையரும் உடன்தேவை. தொடர்பு கொள்ளவும்: தனிஸ் கபே, 636, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [C 4879]

## வகுப்புகள்

க. பொ. த. (உயர்) 87 விஞ்ஞான/கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Science Centre Karaveddy (C 4787)

Spoken English, புதிய பிரிவு ஆரம்பம்: 4-10-86 சனி/ஞாயிறு மாத்திரம். மாலை 5-7 வரை. 12, வைமன் வீதி, நல்லூர். S. B. Iyar. C 4850

ஆரம்பம் 6-10-86 A/L 87 பகல்நேர தூய/பிரயோக கணிதம். ஆசிரியர்: பிரேம்நாத். Time: 9-00 a m. 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (P. M. C. முன்பாக). (C-4605)

Radio, T. V, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பம்! 4-10-86 விரும்பியோர் தொடர்பு கொள்க: Vispa Engineering Aid Hall, 32, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C-4901]

## சேவை

காலை முதல் மாலைவரை எந்நேரமும் பஸ் நிலையத்தில் ''போட்டோ ஸ்ரட்'' பிரதிகளை எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் [C4835]

வேலணை கல்விப்பொருட் காட்சியில் மில்க்வைற் 2-10-86 சேர் வைத்திலிங்கம் துரைசாமி வேலணை ம. ம. வித்தியாலயத்தில் உள்ள மில்க்வைற் விளம்பரச்சாலையில் மில்க்வைற் தயாரிப்புகளை ரூபா 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அறிவு நூல்கள், கீரை விதைகள், பொலித்தீன் பாக் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்துவைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம் [A-1418]

---

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 4300 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணம் ரூபா 250/-செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர் சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 02-10-1986

பொதுமுகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
27-09-86. [A-1419]

---

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது

தரமானது பரு மார்க் சுத்தமான கற்பூரம்

★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி கமலாவதி நவரெட்னம்**

தோற்றம்: 14-06-1918
மறைவு: 31-08-1986

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் இன்னும் எம் நெஞ்சில் சிரஞ்சீவியாய்வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைவேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், சகோதரர்.
238/1. கோவில் வீதி, நல்லூர். (C 4834)

---

## 7-ம் நாள் நினைவஞ்சலி



விழிநீரில் வீரவேங்கை எங்கள் அமரத்துவஜோதி
**இ. காண்டீபன்**
(ஞானம், அம்மான்)
அவர்கள்

பிரசன்னம்: 02-04-1962
அஸ்தமனம்: 23-09-86

சாதனைகள் பல புரிந்தீர் சரித்திரத்தைப் பேசவைத்தீர். வேதனைகள் தந்தெமை ஊமைவிழியாக்கிவைத்தீர். தாகமது தமிழென்றீர். தனுஉண்டு காண்டீபா! சோகமதாய் வீழ்ந்த கதை ஊமை கண்ட கனவிதுதான். 23-09-1986 அன்று செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்த இ. காண்டீபன் (ஞானம், அம்மான்) அவர்களது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு உதவி புரிந்து ஆறுதலளித்த உற்றார். உறவினர், நண்பர்களுக்கு உளம் நிறைந்த நன்றிகள்.

இங்ஙனம்
குடும்பத்தாரும், நண்பர்களும்.
(C 4896)

---

## அடகுவைத்தோர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் ''எமது போராட்டங்களை முறியடிக்கும் நோக்குடன் நிர்வாகம் பல யுத்திகளைக் கையாண்ட போதிலும் எமது சங்கம் இப்போராட்டத்தை மக்கள் போராட்டமாகமுனைப்புடன் முன்னெடுத்துச் சென்றதனால் வங்கி நிர்வாகம் தனது யுக்திகளில் தோல்விகண்டு நிர்வாக சீர்குலைவையே பரிசாகப் பெற்றுக்கொண்டது என்று அடகுவைத்தோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் இதுவரை மீளளிக்கப்படாத நகைகளை மீட்டுக்கொடுப்பதற்கு உரியநடவடிக்கைகளை எடுப்பதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதுவரை நகைகளுக்கான பணத்தை செலுத்திய செலுத்தாத இரு பகுதி வாடிக்கையாளர்களுக்கும், அவர்கள்மேல் செலுத்தப்படுகின்ற அநீதியான வட்டிப்பழுவை நீக்குமுகமாக நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்வதெனவும், இந்த வழக்கை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெறுவதெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ரா)

---

## Institute of Engineering Technology

K. K. S. Road, Chunnakam.

புதிய இந் ஸ்தாபனத்தில் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

★ மோட்டார் மெக்கானிஸம்
★ எலக்ரிக்கல் வயறிங்
★ வெல்டிங்
★ டிராவ்ற்மென்ஷிப்
★ ஓட்டோ வயறிங்
★ வைண்டிங்
★ றேடியோ - ரீ. வீ.

ஆரம்பம்: 01 - 10 - 1986

(C-4884)

---

## வடமாகாண புற்று நோய்ச் சங்கம்

யாழ்ப்பாணம்

## புற்றுநோய் அறிவுப்போட்டி 1986

இவ்வெழுத்துப் போட்டி யாழ்ப்பாண தாதிமார் பயிற்சிப் பாடசாலை போதனா மண்டபத்தில் ஒக்டோபர் 12ம் திகதி (12-10-86) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பம் ஆகும்.

விண்ணப்பித்த மாணவர்களினது சுட்டிலக்கம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுட்டிலக்கத்தைப் பெறாத மாணவர்கள் உடனேகீழ்க்காணும் விலாசத்துடன்தொடர்பு கொள்ளவும்:-

உப தலைவர்: வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம்
122, இராசாவின் தோட்ட றோட்,
யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
டாக்டர் மா. ஜெகநாதன்
தலைவர்.

A 1420

---

சண்டிலிப்பாய் - மாகியம்பதி - அங்கணாக்கடவை
ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான
அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1-ம் | பரிசு | இல. | 1589 |
| 2-ம் | ,, | ,, | 1822 |
| 3-ம் | ,, | ,, | 501 |
| 4-ம் | ,, | ,, | 2311 |
| 5-ம் | ,, | ,, | 3158 |
| 6-ம் | ,, | ,, | 3476 |
| 7-ம் | ,, | ,, | 1552 |
| 8-ம் | ,, | ,, | 3147 |
| 9-ம் | ,, | ,, | 3377 |
| 10-ம் | ,, | ,, | 323 |
| 11-ம் | ,, | ,, | 2007 |
| 12-ம் | ,, | ,, | 795 |
| 13-ம் | ,, | ,, | 2215 |
| 14-ம் | ,, | ,, | 1750 |
| 15-ம் | ,, | ,, | 2183 |
| 16-ம் | ,, | ,, | 908 |
| 17-ம் | ,, | ,, | 2417 |
| 18-ம் | ,, | ,, | 1779 |
| 19-ம் | ,, | ,, | 1745 |

அநேக மக்களின் வேண்டுகோளிற்கிணங்க காலம் தாமதித்து பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

இங்ஙனம்
பரிபாலனசபை, தொண்டர் சபை.

C 4889

உலகச் செய்திகள்

மூன்றும் உலக அகதிகள்————

# மேற்கு ஜெர்மன் நோக்கி

# ஆயிரக்கணக்கில் படையெடுப்பு

பொன், செப்டெம்பர் 28

**மேற்கு ஜெர்மன் நோக்கி ஆயிரக்கணக்கில் அகதிகள் நகரத்தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகதிகள் 3ம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். அக்டோபர் மாதம் முதலாம் திகதி மேற்கு ஜெர்மன் அரசு கொண்டுவரவுள்ள அகதிகள் கட்டுப்பாட்டு விதிகளிலிருந்து தப்பும்வகையிலேயே இவ்வாறு அகதிகள் மேற்கு ஜெர்மன் நோக்கி வரத்தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

கடந்த வாரம் முதல் சிறு சிறு குழுக்களாக மேற்கு ஜெர்மன் நோக்கி நகர ஆரம்பித்த இந்த அகதிகள் கடந்த ஓரிருதினங்களில் ஆயிரமாயிரமாக வாகனங்களில், மேற்கு ஜெர்மன் நோக்கி வரத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு ஜெர்மன் அரசும் இந்த அகதிகள் நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் மேற்கு ஜெர்மனுடனான பெர்லின் எல்லைப் பகுதியில் கடு தடைவிதிகளை அறிவித்துள்ளது.

மேற்கு ஜெர்மன் நோக்கி நகர ஆரம்பித்துள்ள அகதிகளில் பெரும்பாலானவர்கள், ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று அறியப்படுகின்றது.

துருக்கியிலிருந்து சுமார் 27 ஆயிரம் பேர் கொண்ட ஈரானிய அகதிகள் 600 மோட்டார் வாகனங்களில் தரை மார்க்கமாக மேற்கு ஜெர்மன் நோக்கி வந்துகொண்டிருப்பதாகத் தெரியக்கப்பட்டது.

இவர்களில் ஒரு குழுவினர் பல்கேரிய எல்லையில் வைத்து திரும்பி அனுப்பப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை அக்டோபர் மாதம் முதலாம் திகதிமுதல் வெளிநாட்டு அகதிகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் விஸா வழங்கும் முறையில் மேற்கு ஜெர்மன் அரசு தீவிர கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவுள்ளது.

இப் புதிய நடைமுறையின் பின்னர் மேற்கு ஜெர்மனிக்குள் வெளிநாட்டு அகதிகள் பிரவேசிப்பது வேகமாகக் கட்டுப்படுத்தப்படுமென மேற்கு ஜெர்மன் அரசு அறிவித்தது.

## புதிய மணிக்கோபுரம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையிலுள்ள ஞானவைரவர் ஆலயத்தை விஸ்தரித்து புதியமணிக்கோபுரம் ஒன்றை அமைப்பதற்குவைத்தியசாலைப்பொறுப்பதிகாரி டாக்டர் இ செல்வநாயகம் தலைமையிலான பரிபாலன சபை தீர்மானித்துள்ளது. [வா-இ]

காஷ்மீரில்

## முஸ்லிம்கள் கலவரம்!

ஸ்ரீநகர், செப் 28

காஷ்மீரில் ஸ்ரீநகருக்கு 30 கிலோ மீட்டர் வடக்கிலுள்ள பாரமுல்லா என்ற பள்ளத்தாக்குப் பகுதியில் முஸ்லிம் இனத்தவர் கலவரத்தில் ஈடுபட்டனர்.

பாரமுல்லாபகுதி புதுடில்லியின் நேரடி நிர்வாகத்தில் உள்ளது இந்த நிர்வாகத்தை நீக்கி பாகிஸ்தானுடன் இப்பகுதியை இணைக்கும்படி கோரியே இங்குள்ள முஸ்லிம்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

இந்திய மாநிலங்களில்————

# ஹிந்தி ஏற்கப்படும்வரை

## ஆங்கிலமே உத்தியோகபூர்வ மொழி!

## — பிரதமர் ராஜீவ்

புதுடில்லி, செப். 28

ஹிந்தி மொழி பேசாத இந்திய மாநிலங்களில் அம்மொழி திணிக்கப்படமாட்டாதுஎன்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உறுதியளித்துள்ளார். இதுகுறித்து தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரனுக்கும் கடிதம் மூலம் திரு. காந்தி அறிவித்துள்ளார்.

திரு. காந்தி ஹிந்தி மொழி அமுலாக்கம் குறித்து தெரிவித்திருப்பதாவது: ''ஹிந்தி மொழி பேசாத இந்திய மாநிலங்களில் அம்மொழி ஏற்றுக்கொள்ளப்படும் வரை ஆங்கிலமே தொடர்ந்து உத்தியோகபூர்வ மொழியாக இருக்கும்''.


திரு. ராஜீவ் காந்தியின் இந்த அறிவிப்பை மத்திய உள்நாட்டமைச்சர் திரு. பூட்டாசிங் சகல மாநிலங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

தற்போது அமெரிக்காவில் சிகிச்சைபெற்றுவரும் தமிழக முதலமைச்சருக்கும் இந்த அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது

இதனையடுத்து தமிழகத்தில் ஹிந்தி திணிப்புக்கெதிரான சகல போராட்டங்களையும் கைவிடும்படி முதலமைச்சர் திரு எம் ஜி. ஆர். தமிழக தலைமைச்செயலர் திரு எ. பத்மநாதன் மூலமாக தமிழக மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.


# பவர்ஸ்

## வீட்டுத் தோட்ட உர வகைகள்




MASTERS ABC 2/83

தேவையான விசேட உரத்தின்
இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

- இல. 1. தாவர A வர்க்கம்
- இல. 2. தாவர B வர்க்கம்
- இல, 3. பழ மரங்கள்
- இல. 4. கிச்சிலி மரங்கள்
- இல. 5. வாழை, அன்னாசி
- இல. 6. விசேட பப்பாசி
- இல. 7. விசேட உருளைக்கிழங்கு
- இல, 8. விசேட மிளகாய்
- இல. 9. விசேட வெண்காயம்
- இல. 10. மலர் – பொது
- இல. 11. விசேட புற்றரை
- இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
- இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
- இல. 14. மலர் – ''விசேடம்''
- இல. 15. விசேட வெற்றிலை
- இல. 16. விசேட திராட்சை
- இல. 17. விசேட ஸ்ரோபறி
- இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

(A-1365)


## சென்னை பெசன்ட் நகரில்

# 'ஆறுபடைவீடு' முருகன்தலம்

சென்னை, செப். 28

சென்னையின் பிரபல குடியிருப்பு மையமான பெசன்ட் நகரில் முருகக் கடவுளின் ஆறுபடை வீடுகளைச் சித்தரிக்கும் வழிபாட்டுத் தலமொன்று அமைக்கப்படவுள்ளது.

காஞ்சி காமகோடி பீடத்தின் அறிவுறுத்தலுக்கிணங்கவே இந்த வழிபாட்டுத்தலம் அமைக்கப்படவுள்ளது. இதற்கென இரண்டு கோடி ரூபா செலவிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழிபாட்டுத்தலத்தை அமைப்பதற்கென தமிழக அரசு ஒரு ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது

செயற்கைக் குன்றுகள் மற்றும் சூழ்நிலைகளை ஏற்படுத்தி இந்த ஆறுபடை வீடு திருத்தலம் அமைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

''வெறும் வழிபாட்டுத்தலமாக மட்டுமல்லாமல் குழந்தைகள் நலன், பெண்ணுரிமை ஆகியவற்றைப் பேணும ஒரு மையமாகவும் இந்த முருகன் தலம் விளங்கும்'' என்று இதன் அமைப்பு வேலைகளுக்குப் பொறுப்பான டாக்டர் ஏ. அழகப்பன் தெரிவித்தார்.

## ''எமது பொருட்களுக்கு வெளிநாட்டில் பெரும் வரவேற்பு உள்ளது''

கிளிநொச்சி, ஞாயிறு

எமது மூதாதையர்கள் உற்பத்தியாக்கிய மரங்களில் இருந்து கிடைக்கும் பயன்களை அனுபவிக்கும் நாம் எமது பிற்காலசந்ததி பயன்பட பயன்தரும் கனி மரங்களை நாட்டவேண்டும்.

இவ்வாறு முல்லை வள்ளிபுனம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பனம்பொருள் அபிவிருத்திக் கண்காட்சியை திறந்து வைத்து பேசிய வள்ளிபுனம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. செல்லையா சதாசிவம் கூறினர்.

முல்லை வள்ளிபுனம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி வேதமனோகரி நல்லதம்பி தலைமையில் இப் பொருட்காட்சி இடம் பெற்றது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அதிபர் செல்லையா சதாசிவம் மேலும் பேசுகையில் ''நமது முன்னோர்கள் உற்பத்தியாக்கிய பனை மரங்களில் இருந்து பெற்ற பொருட்களைக் கொண்டு செய்யப்பட்ட அழகியபொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது எமது மக்களின் கைவண்ணத்தில் உருவான பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்புள்ளது''

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வே பரமலிங்கம் திரு அ. மருதலிங்கம், பனம்பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அற்புதராசா மாதர் சங்க செயலாளர் செல்வி வ. கண்மணி ஆகியோரும் உரையாற்றினர்கள். (இ)

## மணிவாக்கு

சொல்லின் வலிமை அபாரமானது: பின்வாங்கி ஓடும் ஒரு படையை, தேர்ந்தெடுத்த ஒரு சிறப்பான சொல்லால் கட்டுப்படுத்தி தோல்வியை வெற்றியாக்கி ஒரு சாம்ராஜ்யத்தையே காப்பாற்றிவிடலாம்.

—எமில் டி ஜிராரிடின்

## நமது நோக்கு

# தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு

இந்திமொழி திணிப்பு தொடர்பாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு ஒருவாறு அடங்கும் அறிகுறி தெரிகின்றது. இது தற்காலிகமானது தானு, மீண்டும் இன்னொரு சமயத்தில் தலைதூக்குமா என்பதை அறுதியிட்டு சொல்ல முடியாது

ஏனெனில் இந்தியா சுதந்திரமடைந்தகாலம்தொடக்கமே அவ்வப்போது மத்திய அரசிலுள்ள இந்திமொழி அபிமானிகள் மெதுவாக தென்மாநிலங்களில் அதனை புகுத்த முயல்வதும், அதனல் அரசியல் கொந்தளிப்பு உருவாவதும் அங்கு சகஜம்.

தமிழ்நாட்டில் "திராவிடஸ்தான்' கோரிக்கையொன்று முன்னர் உருவானதற்கும், திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்றக்கழகம் போன்ற அரசியல் கட்சிகள் வளர்வதற்கும் இந்தவிதமான இந்தித் திணிப்பு முயற்சிகளே காரணம்.

இதே விதமான இந்தி எதிர்ப்பு இயக்கங்கள் ஏனைய இந்திபேசாத மாநிலங்களிலும் தலைதூக்கியதையடுத்து தலைசிறந்த ஜனநாயகவாதியான அமரர் ஜவஹர்லால்நேருஅவர்கள் "இந்திபேசாதமாநிலங்கள் விரும்பாதவரை இந்தி மொழியைத் திணிக்கமாட்டோம்" என்ற உறுதி மொழியை வழங்கினர். நேருவுக்குப்பின் அவரது புதல்வியார் திருமதி இந்திராகாந்தியும் இதேவிதமானதொரு வாக்குறுதியை வழங்கினர்.

இப்பொழுது நேருவின் பேரர் ராஜீவ் காலத்தில் மீண்டும் இந்திப்பிரச்னை தோன்றியுள்ளது

இந்தியாவில் இந்தோ-ஆரியர் இனத்தவர்கள் 72 வீதமும், திராவிட இனத்தவர்கள் 25 வீதமும், மொங்கோலிய இனத்தவர் 3 வீதமும் வாழ்கிருர்கள். இந்தியுடன் 16 மொழிகள் ஆட்சி மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவின் பெரும்பான்மையினர் (குறிப்பாக வடநாட்டினர்) பேசும் ஒருமொழியை (இந்தியை) ஆட்சிமொழியாக வளர்த்திடவேண்டுமென்ற விருப்பம் அந்நாட்டுத் தேசியத் தலைவர்கள் பலருக்கும் உண்டு மகாத்மாகாந்தி, நேரு போன்ற பெரியார்களும் இதற்கு இணக்கமானவர்களே, ஒரு விதேசிய மொழியை ஆட்சி மொழியாகக்கொள்வதைவிட ஒரு சுதேசிய மொழியையே ஆட்சிமொழியாகக் கொள்வது சுதந்திரநாட்டின் மதிப்பையும் ஒருமைப்பாட்டையும் அதிகரிக்கும் என்று அவர்கள் கருதினர்கள்.

ஆனல் ஒரு குறிப்பிட்ட பகுதியில்மட்டும்பேசப்படும் ஒருமொழியை நாடு முழுவதற்குமேஆட்சி மொழியாகப்புகுத்துவதானது அந்த மொழியைப் பேசுபவர்களின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும். அதனைப் பேசாத பகுதிகளை இரண்டாந்தரமான இடத்துக்குத் தள்ளிவிடும். இப்பகுதிகளின் கலைகலாசார மற்றும் துறைகளில் எல்லாம் இந்தியும் அதையொட்டிய மாபுகளும் புகுத்தப்பட்டுவிடும் என அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் தலைவர்களும் கருதினர்கள்,

நாட்டின் ஒருமைப்பாட்டைக்கட்டிக்காத்து வளர்ப்பதற்கு ஒரு தேசியமொழியால்,முடியுமானல் அதுவே ஆட்சி மொழியாகவும் அமைவதானது அத்தேசத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவே கருதவேண்டும். ஆனல்மக்கள்மத்தியில் நம்பிக்கையீனத்தை உருவாக்கி தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம்விளைவிக்கக்கூடிய நிலையை ஒரு மொழித்திணிப்பு ஏற்படுத்துமானல், அந்த முயற்சியைக் கைவிடுவதுவே தேசிய நலனில் அக்கறையுள்ளவர்கள் செய்யக்கூடிய காரியம்.

இப்படியான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டவேளையிலேயே அமரர் நேரு இந்தித்திணிப்புப்பற்றி முன்கூறிய அந்த முக்கியமான பிரகடனத்தைவெளியிட்டார்.

ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை அமர்த்தி நாடு முழுவதும் அதனை ஆட்சிமொழியாக்கவேண்டும்என இந்தி அபிமானிகள் நெருக்கிக்கொண்டிருந்த வேளையில், எதிர்கால விளைவுகளை நன்கு உணர்ந்திருந்த நேருஜிபால் மாத்திரமே அப்படியான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கமுடியும்.

அந்த உறுதிமொழிக்கு அடிக்கடிசோதனை ஏற்படுவதைப்பார்க்கையில், தீவிர இந்தி அபிமானிகளைக் கொண்ட ஆரசு ஒன்றுமத்தியில்உருவாகும்பட்சத்தில் நேருவின் வாக்குறுதி காற்றில் பறந்துவிடுமோ என தென்னக மக்கள் அச்சங்கொள்வதில் நியாயமுண்டு.

இப்பொழுதுஇந்திமொழி வாரத்தையொட்டி தென் மாநிலத்திலுள்ள மத்திய அரச பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல் ஒன்றில் பணியாளர்கள் கடிதங்களிலும், கோப்புகளிலும் இந்தியிலேயே கையெழுத்திடவேண்டுமென பணிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பு உருவானது.

இந்த விடயத்தில் எப்பொழுதுமே விழிப்புடனிருந்துவரும் தி மு கழகத்தினர் இப் போராட்டங்களுக்கு முன்னணி வகித்தனர். மத்திய அரசுடன் மிகச்சினேகபாவத்துடன் நடந்துகொள்ளும் தமிழக முதல்வர் திரு எம்.ஜி ராமச்சந்திரன் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதினர். அதன் விளைவாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்ற உறுதி மொழியை ராஜீவ் காந்தியும் வழங்கியுள்ளார்.

இவ்வாறே நீடிக்குமானல் தென்னக மாநிலங்கள் இந்திவிடயத்தில் எப்பொழுதுமே சந்தேக மனப்பான்மையுடனேயே இருந்துவிடுவார்கள். இது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு உகந்ததல்ல பிளவு சக்திகளுக்கே உதவுவதாய் அமையும்.

எனவே இந்திமொழி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளும் வரை இந்தியைத் திணிப்பதில்லையென்ற கொள்கை அரசியல் சாசனத்திலேயே இடம்பெறச்செய்யப்படுவது அவசியமாகின்றது

தமிழ் நாட்டில் போராட்டம் நடத்திவரும் எதிர்ப்பியக்கத்தினரும் இதனையே வற்புறுத்துகிருர்கள்.

# "கிளிநொச்சி மாவட்டத்தில்——— ஆசிரியர்மாணவர்கைதாவதை எதிர்த்து போராடவேண்டும்"

கிளிநொச்சி,ஞாயிறு.

"கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஆசிரியர்கள், மாணவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்படும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர். இச்செயலை ஆட்சேபித்து எல்லோரும் ஒருமுகமாகப் போராட முன்வர வேண்டும்."

இவ்வாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கநிதிச்செயலாளரும்அதிபருமான நா. சோதிநாதன் கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

கிளிநொச்சி குருகுலத்தில் அத்தியாவசிய சேவைகள் குழுத் தலைவர் திரு.மு.இராமநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அதிபர் திரு. சோதிநாதன் மேலும் பேசுகையில்: "ஆசிரியர்களும் மாணவர்களும் கைதான போதும் கொலையான போதும், சித்திரவதைக்குள்ளான போதும் போராட்டக் களத்தில் குதிக்காதது ஆசிரியர்கள் குற்றம் இல்லை இந்தப் போராட்டத்தைமுன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்கள் ஆசிரியத் தொழிற் சங்கம் தான்.

ஒரு பிரதேசத்தில் ஏட்டிக்குப் போட்டியாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு எதிராக மற்றும் ஒரு தொழிற் சங்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதனல் ஏற்பட்ட இடைஞ்சலாலே இங்கு இவ்வாருன போராட்டம் நடத்த முடியாது உள்ளது.

இதேவேளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நாம் மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கவிரும்புகிறேம். அவர்களை ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாக்க முயலுகிறேம். இந்தக் குறிக்கோளுக்கு யாரும் இடைஞ்சலாக இருக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறேன்."

இன்று அரசு எமது கல்வியைத் திட்டமிட்டு அழித்து வருகிறது· இதற்காகக் கல்விக்கூடங்களை சேதப் படுத்தியும் வருகிறது.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவின் தலைவரும், நீர்ப்பாசனப் பொறியியலாளருமான ரி சுப்பிரமணியமும் உரையாற்றினர். [இ]

# உப-தபால் அதிபர்களுக்கு நியாயம் வழங்குக!

## மக்கள் கருத்து

யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் மாகாணங்களிலும் கலவரங்களாலும் அமைதியின்மையாலும் குழப்பங்களாலும் கொள்ளைகளாலும் உப அஞ்சல் அலுவலகங்களில் முன் நடைபெற்ற வேலைகளில் கால் பங்குவேலைதானும் நடைபெறமுடியாமல் போய்விட்டது இதனல் இப் பகுதிகளில் கடமையாற்றும் உபதபாலதிபர்களுக்கு 1986ம் ஆண்டுக்குரிய சம்பளம் மோசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஒய்வூதியச் சம்பளங்கள் (Pension Payments) உப அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவு நிறுத்தப்பட்டது.

இடையிடையே முத்திரைத் தட்டுப்பாடு நிலவியதால் போதிய முத்திரை கிடைக்காததால் விற்பனையில் வீழ்ச்சியேற்பட்டது.

உப அஞ்சல் அலுவலகங்களுக்கு கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து தேவைப்படும் பணம் கிடைக்காததால் மணி ஓடர்களை மக்களுக்கு மாற்றிக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. பெருந்தொகையானமணி ஓடர்களை மக்கள் பெரிய தபால் கந்தோர்களில் கொண்டுபோய் மாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தொலைபேசிகள் வருடக்கணக்கில் திருத்தப்படாததால் மக்கள் தொலைத் தொடர்புகள் கிடைக்காததால் தனியார் நிறுவனங்களை நாடினர். இதனல் தொலைபேசி வேலைகளிலும் வீழ்ச்சியேற்பட்டது.

தொலைபேசிகள் இயங்காததால் தந்திகள் அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டது. எனவே தந்திகள் அனுப்பும் வேலைகளிலும் வீழ்ச்சி.

தருமப்பணக் கொடுப்பனவும் பணக்குறைச்சலால் உரிய காலத்தில் தருமப் பணம்பெற முடியபமல் மக்கள் தினமும் கந்தோர்களில் தவமிருக்கும் நிலைமை ஏற்பட்டது. உப அஞ்சல் நிலையங்கள் மீது இதனல் மக்களுக்கு அதிருப்தியும் வெறுப்பும் ஏற்பட்டு வருகின்றது.

இத்தகைய சீர்கேடுகளால் உப அஞ்சல் அலுவலகங்களில் வேலைசெய்யும் அதிபர்கட்கு 1986ம் ஆண்டுக்குரிய சம்பளக் குறைவும் சம்பளவெட்டும் அவர்களைப் பெரும்பாதிப்புக்குள்ளாக்கியது.

உப அஞ்சல் அதிபர்களின் சம்பளத்தைக் குறைப்பது மேலே சொல்லப்பட்ட காரணங்களையிட்டு மேலதிகாரிகள் கவனஞ்செலுத்தி முன்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தையே இவ்வருடத்துக்கு வழங்குவது நீதியான செயலாகும்.

இச் சீர்கேடுகளுக்கு உபஅஞ்சல் அதிபர்களைப் பொறுப்பாளர்களாக்கி அவர்களின் சம்பளத்தை மிகமோசமாக வெட்டுவது முறையற்றது.

அஞ்சல்அலுவலகத் தலைமை அதிபதிக்கு இக்காரணங்களை செவ்வனே விளக்கி மீண்டும் சென்ற ஆண்டு பெற்ற சம்பளத்தையே இவ்வருடம் உப தபாலதிபர்கள் பெறுவதற்குத் தொழிற்சங்கங்கள் வேண்டிய நடவடிக்கைகளையெடுக்க வேண்டும்.

கே. இராஜசிங்கம்
யாழ்ப்பாணம்.

உபதபாலதிபர்களின் பதவி நிரந்தரமற்றதெனவும் குறிக்கப்பட்ட நிலையான சம்பளத்துக்குரியதல்ல என்பதையும் சமீபத்தில் உப தபாலதிபர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பளப்பட்டியல்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

உபதபாலதிபர்களுக்கு அவர்களது அலுவலகங்களில்நடைபெறும் வேலைகளைப் பொறுத்து புள்ளிவிபரங்களின்படி (unit system) வருடாந்தச் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது.

இதன்படி 1985ம் ஆண்டுக்குரிய புள்ளிவிபரங்களின்படி 1986ம் ஆண்டுக்குரிய சம்பளம் [allowance] நிர்ணயிக்கப்பட்டு உப அஞ்சல் அதிபர்களுக்கு கணக்காளர் அனுப்பியுள்ளார்.

# கத்தோலிக்க மலர் வெளியீடு

பண்டத்தரிப்பு, ஞாயிறு:

காங்கேசன்துறை கத்தோலிக்க மலர் வெளியீட்டுக் குழுவின் விசேட பொதுக்கூட்டம் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியில் அடுத்த மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை வட்டார கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மலர்வெளியீடு பற்றி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இம்மலருக்கான ஆக்கங்களையும், கட்டுரைகளையும் தாமதமின்றி அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மலர் ஆசிரியர் திரு. பி. ஏ. சி. ஆனந்தராஜன் கேட்டுள்ளார்.

[வா]


# பாராட்டு விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 14 வருடகாலம் அதிபராக கடமையாற்றி ஒய்வு பெற்றுள்ள திருமதி கலாவல்லி ஆறுமுகதாசனுக்கு கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடாத்தும் சேவை நலம் பாராட்டு விழா அடுத்த மாதம் முதலாம் திகதி புதன் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் கலந்து கொள்வார் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன், தென்னிந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்சக ஆதீன முதல்வர் அதிவண டி. கே. அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, புலவர் கா. வேல்முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள். (வ-இ)



வெலிக்கடையிலும், பூசாவிலும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் நகர் உதயதாரகை சன சமூக நிலையத்தினர் நேற்றுமுன்தினம் நடாத்திய உண்ணாவிரதத்தில் பங்குபற்றியமக்களில் ஒரு பகுதியினரை படத்தில் காண்கின்றீர்கள்.

## 'முருகந்தநகர்' மக்களின்

# கோரிக்கைகளை நிறைவேற்ற அரச அதிபர் உறுதி

பளை, ஞாயிறு

பிரதமர் பிரேமதாசாவின் 10 லட்சம் மாதிரி வீடமைப்பு திட்டத்தின் கீழ் மாசார் கிராமத்தில் புதிதாக அமைக்கப் பட்டுவரும் மாதிரிக் கிராமத்தை பார்வையிட சென்ற கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஜெகா செந்தில் நாதனுக்கு அவ்வூர் பொது மக்கள் வரவேற்புவிழா ஒன்று நடாத்தி ஒருமகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தார்கள்.

மகஜரில் கேட்டுக் கொண்டபடி இக்கிராமத்துக்குமின்சார வசதி, பாடசாலைவசதி, குடிநீர்வசதி, வீதி அமைத்தல் ஆகியவற்றை உடனடியாக செய்து தருவதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

அதுமட்டுமல்ல அவ்வூர் பொதுமக்களின் வேண்டுகோளின்படி அக்கிராமத்துக்கு வித்திட்ட முன்னாள் உதவி அரச அதிபர் திரு. ப. முருகையாவின் ஞாபகார்த்தமாகவும், அதனை தொடர்ந்து நிறைவேற்றும் புதிய உதவி அரசஅதிபர் திரு. கந்தசாமியின் ஞாபகார்த்தமாக வும் அக்கிராமத்துக்கு ''முருகந்த நகர்'' என்னும் பெயரை சூட்டி அதன் திரைச்சேலையையும் திரைநீக்கம் செய்துவைத்தார். இறுதியில் மரம் நாட்டும்வைபவமும் நடைபெற்றது. (இ)

## காஷ்மீரில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியிலுள்ள அரச வாகனங்கள், கட்டடங்கள் என்பன சேதமாக்கப்பட்டன. பெற்ரோல் நிலையங்கள் தீயிடப்பட்டன.

இக்கலவரங்களையடுத்து காஷ்மீர் பொலிசார் கலகக்காரர் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையின் போது இரு மாஜிஸ்திரேட் நீதிபதிகள் பொலிசாரினால் தாக்குண்டனர். இவர்கள் இருவரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு பொலிசாருக்கு அனுமதி வழங்காததாலேயே தாக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.


# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதி

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்து உள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்லவிரும்பும் ஆண்கள், பெண்கள் உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச்செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும். சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் இம்மாதம் 18-ம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்பு:-
**N. பாலா**

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது.

★ ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூஸ் குப்பிளான் சந்திக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1355]


## ஒட்டுசுட்டானில் அமைதி

முல்லைத்தீவு, ஞாயிறு

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயமும் சின்னத்தம்பி வித்தியாலயமும் தற்பொழுது வழமைக்குத் திரும்பி ஒழுங்காக நடைபெறுகின்றது. ஆசிரியர்களில் எழுபது வீத மாணவர்களும் மாணவர்களில் எழுபது வீதமானவர்களின் வருகை காணப்படுகிறது. தற்பொழுது ஒட்டுசுட்டானில் அமைதி நிலவுகிறது.

## சிறந்த நிர்வாகஸ்தர்

'கப்பிறு' என நிர்வாக சேவை நண்பர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. எஸ் கதிர்காமநாதன் அண்மையில் காலமானது இலங்கையின் நிர்வாக சேவைக்கும் சைவப் பேருலகுக்கும் பேரிழப்பாகும். சிறந்த நிர்வாகஸ்தரான அவர் அரசாங்க அதிபராக கடமை புரிந்த இடங்களிலெல்லாம் தனது அனுபவ முத்திரையை விட்டுச் சென்றுள்ளார். அம்பாந்தோட்டையில் அரசாங்க அதிபராக இருந்தபொழுது கதிர்காம வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் இறுதிவரை கதிர்காம ஆடி உற்சவத்தை அவர் தவறவிட்ட தயில்லை. மன்னாரில் திருக்கேதீஸ்வரத்துக்கும் மட்டக்களப்பில் வெருக்கல் பிள்ளையாருக்கும் அவர் செய்த பணிகள் பல.

சிறந்த கணக்கியல் நிபுணரான அவர் எவ்விடயத்தையும் ஆராய்ந்து அறிந்த பின்னரே செயலாற்றும் திறமை கொண்டிருந்தார். அவர் அறிவுரை நாடிச் சென்ற நண்பர்கள் பொதுமக்கள் பயனடைந்தே செல்வர். உதவும் மனப்பான்மை கொண்ட உத்தமர்.

பெரியோர் சிறியோர் என்ற பாகுபாடு அவருக்குக் கிடையாது. நிர்வாக சேவையில் முதலிடத்தை வகித்துக் கொண்டிருந்த அவர் வயதும் அனுபவமும் குறைந்த ஊழியருடன் வேலை செய்வது பற்றி அலட்டிக் கொள்வதில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையைத் திறம்பட செய்வதே அவரது நோக்கு இறுதிவரை பல முக்கிய குழுக்களில் அங்கம் வகித்து தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார் உதவியரசாங்க அதிபர் பிரிவுகள் மறுசீரமைக்கும் குழுவில் இவர் முக்கிய பணிபுரிந்தார்

தகுந்த நேரத்தில் அனுபவமும் புத்திசாதுரியமுமுடைய சிறந்த நிர்வாகத்தரை நாம் இழந்துவிட்டோம். அவரை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கு மன அமைதி கிடைக்க ஆண்டவன் அருள்வானாக,

—கோணலீ—

வடமராட்சி

# ஒய்வூதியக்காரர்களுக்கு புதிய பாதிப்பு!

நெல்லியடி, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியிலிருந்து இதுவரை யாழ்ப்பாணம் விளையாட்டரங்கத்தில் அமைந்துள்ள தபால் கந்தோரில் ஒய்வூதியம் பெற்றுவந்த ஒய்வூதியக்காரருக்கு ஒரு புதிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கரவெட்டி போன்ற பகுதிகளில் பென்ஷன் வவுச்சருக்குப் பதிலாக குறிப்பிட்ட தொகைக்குக் காசுக்கட்டளை பெற்று அவற்றை யாழ் விளையாட்டரங்குத் தபால் கந்தோரில் மாற்றிப் பணம்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக ஒவ்வொரு ஆயிரம் ரூபாவிற்கு காசுகட்டளை பெறுபவர் 25 ரூபா கமிஷனைச் செலுத்த வேண்டும். இதைவிட மிகக் சிரமத்துத்துடன் யாழ்ப்பாணம் போய் வர வேண்டிய நிலையும் ஒய்வூதியக்காரருக்கு ஏற்பட்டுள்ளது

## நெடு-குறி- கடற்பகுதியில்

# படையினரின் சோதனையால் பிரயாணிகள் சிரமம்

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு - குறிக்காட்டுவான் பிரயாணிகள் படகு அடிக்கடி நடுக்கடலில் வைத்துக் கடற்படையினரால் சோதனையிடப்படுகின்றது. ஏற்கனவே நயினாதீவு பாதுகாப்புப் படையினரின் பரிசோதனை நிலையத்தில்சோதனை செய்யப்பட்டு வரும் பிரயாணிகள் மீண்டும் கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து சோதனையிடப்படுவதால் பிரயாணிகள் மிகுந்த சிரமப்படுகிறார்கள்.

இது பற்றி நெடுந்தீவு பிரஜைகள் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# 'உணவு முத்திரைக்கு பிரஜைகள் குழுக்கள் சிபார்சு செய்யவேண்டும்'

நெல்லியடி, ஞாயிறு

உணவு முத்திரைகள் வழங்கும் விடயத்தில் மிக மோசமான ஊழல்கள் தலை தூக்கியிருப்பதாகவும், உண்மையில் நேர்மையான உதவி அரசாங்க அதிபர்களே பொதுமக்களின் ஆத்திரத்திற்கு இலக்காகியுள்ளனர் என்றும் இதில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் நெல்லியடி பிரஜைகள் குழு நிறைவேற்றுச் செயலாளர் திரு. ஜே. ஜீ. இராஜேந்திரம் வதிரி திரு. இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடந்த விசேட கூட்டத்தில் கூறினார்.

சட்டத்தரணி திரு. வீ. மகாலிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு இராஜேந்திரம் தொடர்ந்து பேசுகையில், அரிசி ஆலைச் சொந்தக்காரர் லொறி முதலாளிகள், வெளி நாடுகளில் வேலை செய்வோர் ஆகியோரின் குடும்பங்களும் உணவு முத்திரை பெறும் அதே நேரத்தில், உண்மையில் வசதியற்ற குடும்பங்கள் பட்டினியால் பாதிக்கப்படுகின்றன என்று கூறினார்.

இவ்வித ஊழலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாயின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுமுள்ள உணவு முத்திரை பெறுவோரின் பட்டியலும் பொது அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டுமென்றும், அதுபற்றிய ஆட்சேபனைகளை எழுப்பும் உரிமையும் சந்தர்ப்பமும் பொது மக்களுக்கு அளிக்கப்படல் வேண்டுமென்றும். இனிமேல் உணவு முத்திரைகளுக்கு சிபாரசு செய்யும் அதிகாரம் அவ்வப்பகுதி பிரஜைகள் குழுக்களிடம் ஒப்படைக்கப் படல் வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இது தொடர்பான மகஜர்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## இடமாற்றம்

ஒட்டுசுட்டான், ஞாயிறு

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு கே. குலேந்திரா யாழ்ப்பாணக்கச்சேரிக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

அவரின் இடத்திற்கு அதே அலுவலகத்தில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றிய திரு. ஏ. எஸ். தனபாலசிங்கம் உதவிஅரசாங்க அதிபராக தற்காலிகமாக கடமையை ஏற்றுள்ளார். (இ)


# பிரயாண ஒழுங்குகள்

★ சிங்கப்பூர்: (கட்டிடப்பகுதி லேபறேஸ்)
★ லிபியா:- (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்:- (பெண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
★ குவைத்:- (ஆண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
★ குவைத்:. (கவுஸ் மெயிட்ஸ்)
★ சிங்கப்பூர்:- (கவுஸ் மெயிட்ஸ்)
★ குவைத்:- (மெயின்ரெனன்ஸ் கிளீனேஸ்)

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு வருமான ஒழுங்குகள் பெற உடனடியாக 7 படம், பாஸ்போட் முதலிய ஆவணங்களுடன் எங்களை நேரில் வந்து சந்திக்கவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

இணுவில் ஆஸ்பத்திரி முன் ஒழுங்கையால் வரவும்.
(A 1339)

## தொல்புரத்தில்
# உப-பிரதேச சிகிச்சை நிலையமண்டபம் நிறுவப்படும்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச் சாலையின் சேவைகளை விஸ்தரிக்கும் முகமாக உப பிரதேச சிகிச்சை நிலைய மண்டபம் ஒன்று சுமார் நான்கு லட்சத்து50 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் தற்போது துரித கதியில் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகத் தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச் சாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். திருச்சிற்றம்பலம் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

இந்தப் புதிய சிகிச்சை நிலையத்தில் மருந்தகப் பொறுப்பதிகாரியின் அலுவலகம். சுகாதார பரிசோதகரின் அலுவலகம். குடும்ப நல சேவையாளரின் அலுவலகம் ஆகியன இடம்பெறவிருப்பதாகவும் இக்கட்டிடம் திறக்கப்பட்டதும் இப்பகுதிப் பொது மக்களுக்கு சிறந்த சுகாதார வைத்திய சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்றும் இது பற்றித் தெரிவிக்கப்படுகிறது. [ஊ]

## கல்விப் பொருட்காட்சி

பருத்தித்துறை, நிருபர்

பருத்தித்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளினதும் கொத்தணிப் பாடசாலைகளினதும் கல்விசார் பொருட்காட்சி இன்று 29ம், தேதியும் நாளை 30ம் திகதியும் நடைபெறவுள்ளன.

இப் பாடசாலைகளின் 1ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரையான கல்விசார் பொருட்காட்சி புலோலி கொத்தணி அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெறும், இப் பொருட்காட்சியை யாழ். கல்வித் திணைக்கள கல்வியதிகாரி திரு. எஸ். கந்தசாமி ஆரம்பித்துவைப்பார். 7ம் வகுப்பு முதல் உயர்தரவகுப்புகள் வரையான கல்விசார் பொருட்காட்சி கல்வியதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் தலைமையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. யாழ் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் பொருட்காட்சியை ஆரம்பித்துவைப்பார்.

## கடற்படையினரின்
# படகு பழுதடைந்ததால் கடற்றொழிலாளர் பிழைத்தனர்

வேலணை ஞாயிறு

மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மூன்று வள்ளங்களில் சென்று கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ரோந்து வந்த கடற்படையினரைக் கண்டதும் பிடித்த மீனையும், வலைகளையும் கடலில் போட்டுவிட்டு வள்ளங்களில் ஏறி கரையை நோக்கி விரைந்தனர்.

இதனைக்கண்ணுற்ற கடற்படையினர் கடற்றொழிலாளர்களை தொடர்ந்து இயந்திரப் படகில் துரத்திவந்தார்கள். எதிர்பாராத விதமாக கடற்படையினரின் இயந்திரப்படகு பழுதடைந்ததால் அவர்களால் தொடர்ந்து முன்னேற முடியாமல பாதியில நின்றனர். இதனால் கடற்றொழிலாளர்கள் உயிர்தப்பியுள்ளனர். [ஓ]

## பாடசாலை விண்ணப்பம்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

யாழ். வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலையில் புதியமாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் வருகின்ற மாத நடுப்பகுதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பாடசாலை அபிவிருத்திச்சபை தீர்மானம் நிறைவேற்றியுளளது.

87 ஜனவரி 31ல் ஐந்துவயதைப்பூர்த்திசெய்தவர்கள்முதலாம் ஆண்டு வகுப்பில் சேர்வு பெறலாம் என்பதைப் பெற்றோர் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## பிரஜைகள் குழு கூட்டம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழுவின் கூட்டங்கள் தம்பசிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமெனப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். [எ]

## சிறுவர் வார்ட்

பண்டத்தரிப்பு ஞாயிறு

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் 12 கட்டில்களைக் கொண்ட சிறுவர் வார்ட் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் மூன்றரை இலட்ச ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் இந்த புதிய வார்ட்டின் கட்டிட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (வா)

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
தி தி: (29-9-86)
திதி: ஏகாதசி பி. இரவுவரை
கிழமை திங்கள்
நக்ஷத்திரம்- பூசம் மு. பகல் வரை

மேடம்: கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கலாம். வாழ்க்கை சௌக்யம் நிறைந்ததாக இருக்கும். இடமாற்றத்திற்கும் வழிகோலப்படலாம்.

இடபம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும்; பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். வியாபார முன்னேற்றமுமுண்டு.

மிதுனம்: மேலிடத்துச் செல்வாக்குப் பாதிக்கப்படலாம். உங்களைச் சிக்கவைப்பதற்காக சூழ்ச்சி வலை பின்னும் கடையையிலும் கன்னியம் தவறக்கூடும்.

கடகம், பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். அரசபயத்திற்குமிடமுண்டாம். செலவினங்களைக் கட்டுப்படுத்தி நடக்கவும்.

சிங்கம்: சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். புதிய தொழில்முறைகளை மனம்நாடும் காதலர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியடையலாம்.

கன்னி: சீறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாறவைக்கும். ஆயுதங்களுடன் பழகுபவர் அவதானம் வேண்டும். எதையும் சிந்தித்தபின் செயலாற்றவும்.

துலாம்: மாதுருவழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு; தொழிலிலும் சிறப்புண்டு; கண்ணியமான நடவடிக்கைகளில் வெற்றிகாண்பீர்கள்.

விருச்சிகம்: இரக்கசிந்தை மேலிடும். பிறர்உதவி தாராளமாகக் கிடைக்கும். பிள்ளைகளினால் மகிழ்ச்சியுண்டு. சுப தினம்

தனுசு: சத்துருவின் மூலம் பகைமூட்டம் அதிகரிக்கும். அன்னியவாசமும் உண்டாம்; வீட்டிலும் சிறு பிணிக்கு இடமுண்டாம்.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகோலும். பொதுசன மதிப்புக் கிட்டும். இதமான வாழ்வும் உண்டாம்.

கும்பம்: சிறு விபத்தும் ஏற்படலாம். அபாய காரியங்களில் பங்கு பற்றுவதில் அதிக கவனம் செலுத்தவும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தோன்றும்

மீனம்: பிதாவழிப் பெருமையுண்டு. இன்சொல்லுடன் பெரியோர் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுமுண்டாம்.

திருமலை வே. ரவீந்திரன்


# நெஸ்பிறே புலமைப்பரிசில் வென்றோர்!

ரூ. 10,000

கே. வருணி பிரியங்கா
எச்/ கஹவத்தை ஆரம்பக் கல்லூரி,
பெலியத்தை.

மேனகா நெலூஷி சில்வா
ஸ்ரீ ரம்யா, பொத்துபிட்டிய,
வாதுவை.

நலிந்த பிரபாத் அமரதுங்க
மே/பா. சுனில் அமரதுங்க,
கனேகம, தொறவக்க.

கே. கே. சியாத்துபண்டா
பெஹல்பொல,
நக்காவத்தை.

நந்துன் அமா தயானந்த
35/2, சுபோதாராம வீதி.
தெஹிவளை




நெஸ்பிறே வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

JWT NL 2018

புனர்வாழ்வு

## விண்ணப்பப் படிவம் விநியோகம்

பண்டத்தரிப்பு ஞாயிறு நாட்டில் நிகழ்ந்த கலவரங்கள், வன்செயல்கள் ஆகியவற்றில்சிக்கி உயிரிழந்தவர்கள் காணாமல்போனவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளானவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு புனர்வாழ்வ வழங்குவதற்கான அரசின் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்கள் தோறும் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

'படிவம் -அ' 'படிவம்-ஆ, என்று இரு விண்ணப்பப் படிவங்கள் இரு பிரதிகளில் வழங்கப்பட்டு வருவதாகவும், பாதிப்படைந்த குடும்பத்தவர்கள் இப்பத்திரங்களைப் பெற்று நிரப்பி தத்தமது பிரிவு கிராம சேவை அலுவலர்களிடம் எதிர்வரும் அக்டோபர் மாதம் 10-ம்திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடந்தவாரம் ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் இந்த விண்ணப்பப்படிவங்களை பெற்றுச் சென்றனர். [வா]

போஷாக்கு வாரம்:

## வவனியாவில் ஏழு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு

வவனியா, ஞாயிறு அகில இலங்கை ரீதியிலான போஷாக்குவாரம் ஒக்டோபர் 20ம் திகதி முதல் 27ம் திகதி வரையிலும் நடைபெறும் என திட்டமிடல் அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வவனியா மாவட்டத்தில் ஏழு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவனியா திட்டமிடல் பகுதி அதிகாரி ஒருவர் தெரித்தார்.

பாடசாலை பிள்ளைகளுக்கான கருத்தரங்கு வவனியா தமிழ் மகாவித்தியாலயம், பூவரசன்குளம் மகாவித்தியாலயம் மடுக்கந்த மகாவித்தியாலயங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தாய்மார்களுக்கான கருத்தரங்கு தமிழ்பிரிவு, சிங்கள பிரிவு, நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலான கருத்தரங்கு ஒக்டோபர் 22ம் திகதி உதவி அரச அதிபர் காரியாலயத்தில் உள்ள குணநாயகம் மண்டபத்தில் இடம்பெறுமென வவனியா உதவித் திட்டப்பணிப்பாளர் திரு. ரீ. துரைசிங்கம் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கிற்கு இங்குள்ள சகல திணைக்கள தலைவர்களும், கிராமோதயசபைத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள். [இ]

கொத்தணிமுறை

## கல்வி உலகிற்கு கிடைத்த வரப்பிரசாதம்

கிளிநொச்சி, ஞாயிறு கொத்தணிப் பாடசாலை முறை கல்வி உலகிற்கு கிடைத்தவரப்பிரசாதமாகும். இம்முறையால் வசதி படைத்த பாடசாலைகளைப் போன்றே வசதி குறைந்த பாடசாலைகளும் சகலனவற்றையும் அனுபவிக்கின்றன.

இவ்வாறு புதுக்குடியிருப்பு கொத்தணி அதிபர்பதவிஏற்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் கூறினார்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் புதுக்குடியிருப்பு கொத்தணி அதிபராக புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் எஸ். நாகரெத்தினம் பதவி ஏற்றுக்கொண்டார்.

கல்வி அதிபதி மன்சூர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 1977 ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதுபோல் கல்வி முறையில் படிப்படியாக பல சீர்திருத்தங்களை செய்துவருகிறது. செப்டம்பர் மாதம் முதல் சகல பாடசாலைகளும் கொத்தணி நடைமுறையில் இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிதாக பதவி ஏற்ற கொத்தணி அதிபர் எஸ். நாகரெத்தினம் பேசுகையில்; பொருத்தனமான வளங்களை பாடசாலைகளிடையே பகிர்ந்து ஆற்றல்களை, ஒத்துழைப்புகளை சமமாக பயன்படுத்துவதே கொத்தணி அமைப்பின் நோக்கமாகும். புதுக்குடியிருப்பு பகுதியில் கொத்தணி முறையை நல்லமுறையில் வளப்படுத்தி அதன் மூலம் இப்பகுதி கல்வியில் முன்னேற்றம்கான ஆவன செய்வேன் என்றார்.

பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். அதிபர் ஆ. ஜே. இராஜநாயகம் நன்றிகூறினார். (இ)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பணயக் கைதிகளை மீட்க நவீன ரக ஆயுதங்களுடன் போராடும்
The Hostage
(Adults only)

லிடோ
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
பிரபு – நளினி நடித்த
புதிய வெளியீடு
கலர்
நியாயம்

## பொருட்காட்சி

யாழ்ப்பாணம். திங்கள். கோப்பாய் கல்விவலயத்தின் பொருட்காட்சியும், கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் ''மூளை வளம் பாரீர்'' செயல்முறை கண்காட்சியும் நாளை 30ம் திகதியும், நாளை மறுதினமும் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை யாழ். கல்விப் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் திறந்துவைப்பார். இக் கண்காட்சியில் 43 பாடசாலைகள் பங்குகொள்கின்றன. (கை)

## பதவி உயர்வு

ஒட்டுசுட்டான், ஞாயிறு முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. த. சிதம்பரபிள்ளை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு காணி அலுவலராக பதவி உயர்த்தப்பட்டு முல்லைத்தீவு கச்சேரியில் கடமையை இம் மாதம் 15ம் திகதியிலிருந்து ஏற்றுள்ளார்

இவர் ஆரம்பத்தில் காணி மேற்பார்வையாளராக பதவி ஏற்று பின்பு குடியேற்ற அதிகாரியாகவும் பதவி வகித்துள்ளார். (இ)

## நியமனம்

மாவிட்டபுரம், ஞாயிறு தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. இ. ராஜமனோகரன் மல்லாகம்பிரிவு பிறப்பு, இறப்புப் பதிவாளராகவும், வலி வடக்கு விவாகப்பதிவாளராகவும் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழைஇளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் திரு. தி.ராஜசிங்கம், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி ஆகியோரின் புதல்வரான இவர் யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி, மைசூர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழையமாணவராவார்.

## கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், திங்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் கல்விப் பொருட்காட்சி நடைபெற்றது.

பொருட்காட்சியை கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மங்கள விளக்கேற்றிவைக்க பிரதம கல்வியதிகாரி திரு. தங்கராசா திறந்துவைத்தார்.

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் பொருட்காட்சி பற்றிய சொற்பொழிவு இடம்பெற்றது. [ச]

உள்ளூர்:

## தொலைக்காட்சி நிகழ்ச்சி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், திங்கள் வெலிக்கடை சிறையிலும் பூஸா முகாமிலும் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ் குடா நாட்டில் பரவலாக நடைபெற்றுவரும் வெகு ஜனப் போராட்டத்தை ஆதரித்து 25ம் திகதி முதல் 30ம் திகதிவரை சகல உள்ளூர்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இடைநிறுத்தப்படுமென்று ஒலி ஒளி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் இத்தினங்களில் தமிழ் பேசும் அரசியற் கைதிகள் தொடர்பான விவரணப்படம் காண்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

“ஐக்கிய நாணய சங்கம்

## துடிப்புடன் செயலாற்றுவது அத்தியாவசியமாகும்”

பளை, ஞாயிறு ''நவீன விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தால் ஒவ்வொரு கிராமமும் சுயமாக இயங்க வேண்டிய சூழ்நிலை தற்பொழுது உருவாகி வருகிறது. இந் நிலையில் கிராம மக்களிடையேயுள்ள வளங்களை ஒன்று திரட்டும் ஒரு அமைப்பாக ஐக்கிய நாணய சங்கங்கள் மீண்டும் துடிப்புடன் செயலாற்ற வேண்டிய அத்தியாவசிய நிலையிலுள்ளன.''

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாச விசேஷ பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, தலைமையுரை நிகழ்த்திய சமாசத் தலைவர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் கூறினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு ச. ஞானப்பிரகாசம் தமதுரையில், ஒவ்வொரு கிராமமாகச்சென்று ஒவ்வொரு அங்கத்துவரிடமும் மாதாந்தம் பத்து ரூபாவாகச் சேர்த்த சேமிப்பு பணம் இன்று 10 லட்சம் ரூபாவாகப் பெருகி யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு கடன் சலுகைகளை அங்கத்துவ சங்கங்கட்கு வழங்கி ஒரு கூட்டுறவு வங்கியாக யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் விளங்கி வருகிறது. அதன் வழியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட சமாசமும் துரித வளர்ச்சியடைய அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. யோசெப் தமதுரையில், 1987ம் ஆண்டு ஜனவரி முதல் வீடமைப்புக்கடன்கள் யாவும் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமே வழங்கப்படவிருப்பதால் ஒவ்வொரு பகுதியிலும் ஐக்கிய நாணய சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு சமாசம் முன்னின்று உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்,

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். எஸ். தர்மலிங்கம் சமாசச் செயலாளர் திரு. கா. நாகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு ஊர்வலம்

ஒட்டுசுட்டான், ஞாயிறு பூஸா தடுப்பு முகாம், வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகியவற்றில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், படையினரின் தாக்குதல்களைக் கண்டித்தும் தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் இடம்பெயர்ந்து வந்த அகதிகளும் சேர்ந்து கண்டன ஊர்வலமொன்றினை நேற்றுமுன்தினம் நடாத்தினர்.

இந்த ஊர்வலத்தில் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், தாய்மார்கள், வயோதிபர்கள் ஆகியோர் கைகளில் சுலோக அட்டைகள் ஏந்தியபடியும், சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டும் சென்றார்கள்.

ஊர்வலம் மாங்குளம், முல்லைத்தீவு வழியாகச்சென்று ஒரு பகுதியினர் முள்ளியவளை கந்தசாமி கோவிலிலும் மற்றொரு பகுதியினர் காட்டு விநாயகர் ஆலயத்திலும் உண்ணாவிரதமிருந்தனர். [வா]

## நியமனம்

மன்னார், ஞாயிறு இத்தாலி நாட்டில் கல்வி பயின்று அந்நாட்டிலேயே பணியாற்றிய அருட்திரு ஏ. பீற்றர் அடிகளார் தற்சமயம் மன்னார் மறை மாவட்டத்தில் சேர்ந்து விடத்தல்தீவு புனித மரியன்னையின் ஆலய பங்குத் தந்தையாக நியமனம் பெற்றுள்ளார். புனித அசிசியார் சபையைச்சேர்ந்த இவர் மன்னார் சின்னக்கடையைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.

## 10 இளைஞர்க்கு பயிற்சி

நெல்லியடி, ஞாயிறு கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க சமாஜத்தின் கீழ் இயங்கும் தேசிய பயிலுனர் சபையின் அனுசரணையுடன் 10 இளைஞர்கள் லிகிதர் தரத்தில் உள்ள பதவிகளுக்கான பயிற்சி பெற்று வருகின்றனர்.

3 வருடப் பயிற்சியின்பின் இவர்களுக்குத் தேசிய பயிலுநர்சபையால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் இச்சாமாஜத்தில் நிரந்தர உத்தியோகமும் வழங்கப்படவுள்ளன. தற்போது இவர்களுக்கு தேசிய பயிலுனர் சபையால் வழங்கப்படும் 300 ரூபாவுடன் மேலதிகமாக 200 ரூபாவும் வழங்கப்படுகிறது.

புலோலி ப. நோ. கூ சமாஜங்களும் இத்திட்டத்தை மேற்கொண்டு நடாத்த முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் கிழக்குமாகாணத்திலும் இதை அறிமுகப்படுத்தி மக்களுக்கு உதவ இச்சபை தீர்மானித்துள்ளதாகவும் அறியப்படுகிறது. (இ)

## சனசமூக நிலையங்களின் பணி

உடுவில், ஞாறு ''தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் மத்தியில் சனசமூக நிலையங்களின் பங்கு முக்கியமானதாகும். அகதிகள் புனர்வாழ்வு, விளையாட்டு, கல்வி புகட்டல் போன்ற பல சேவைகளை சனசமூக நிலையங்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.''

கந்தரோடை சனசமூக நிலைய ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. ஆ. சி. கணேசவேல் இவ்வாறு கூறினார்,

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்: ஆ.சி. கணேசவேல், க. புவனேந்திரநாதன், சி. முத்துகிருஷ்ணர், செ.கதிர்காமசோதி.

தலைவர்: சி. கருணாநிதி. உப தலைவர்கள்: வீ. ஜெயகாந்தன், மு. சிவநேசன். செயலாளர்; செ. இராசகோபால். உபசெயலாளர்: யோ. நிரஞ்சன். பொருளாளர்: சி. சுந்தரேஸ்வரன். நிர்வாக உறுப்பினர்கள் பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (வா)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 29-9-86

## போராளி ஒருவர் சாமர்த்தியமாக உயிர்தப்பினர்

நமது நிருபர்

போராளி ஒருவர் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையருகில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டபோதும் சாமர்த்தியமாக அவர் தப்பியோடி விட்டார்.

மேற்படி சம்பவத்தை தொடர்ந்து கவசவாகனம் ஒன்றில் மாவிட்டபுரம் சந்தி வரை வந்த இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எதிர்கொண்டு தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதலைத் தொடர்ந்து கவசவாகனத்தில் வந்த இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர் (எ)

## 23 அகதிகள் வந்தனர்

கொழும்பு, ஞாயிறு

தமிழகத்திலிருந்து வள்ளமொன்றில் வந்த 23 தமிழ் அகதிகள் தலைமன்னாரில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளதாக வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது.

சிறையில் உண்ணாவிரதிகள்

# "மரணத்துடன் போராடுகையில் அரசுடன் பேச்சுவார்த்தையா?"

## —முன்னாள் யாழ். மேயர்

யாழ்ப்பாணம், திங்கள்.

''சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மேற்கொண்டிருக்கும் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போரினால் சாவின் விளிம்பை உண்ணாவிரதிகள் எட்டிப் பிடித்திருக்கும் வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை''.

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் மக்களால் அனுஷ்டிக்கப்பட்ட ஒருநாள் உண்ணாவிரதத்தில் உரையாற்றுகையில் முன்னாள் யாழ். மேயர் சட்டத்தரணி இரா. விஸ்வநாதன் இவ்வாறு கூறினார்.

திரு கே. ஐ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத முடிவுக் கூட்டத்தில் திரு. விஸ்வநாதன் தொடர்ந்து பேசுகையில், ''சிறைகளில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகளில் 15 பேர்மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமா?

''மாகாணசபை யோசனைகளைத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வடக்குக் கிழக்கு இணைப்புக்கு இடமில்லை என்று ஜனாதிபதி கூறும்போது கூட்டணியினர் போராளிகளுடன் தோளோடு தோள்நின்று ஈழத்திற்காகப் போராடவேண்டும்'' என்றார்.

சிறைச்சாலைகளில் தமிழர்கள் சித்திரவதைசெய்யப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுவதற்கு முடிவுகட்டும்வரை அரசுடனான எந்தவிதமான பேச்சுவார்த்தைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டாமென்றும் திரு. விஸ்வநாதன் கேட்டுக் கொண்டார்.

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த செந்தீபன் பேசுகையில், ''மனித நேயமற்ற இந்த அரசாங்கம் சிறைக் கைதிகளின் ஆறம்சக் கோரிக்கைகளை உதாசீனம் செய்துவருகின்றது. நாடுதழுவிய உண்ணாவிரதப் போராட்ட மூலம் சர்வதேசரீதியில் அரசுக்கு நெருக்கடியை நாம் ஏற்படுத்தவேண்டும்'' என்று கூறினார்.

வண. பிதா ஜே. டேவிற் ஜெயநாயகம் உண்ணாவிரதத்தை முடித்துவைத்துப் பேசுகையில், உண்ணாவிரதம் பலமுள்ள ஆயுதமென்பதை இந்த அரசு உணரவில்லை என்று கூறினார்.

உண்ணாவிரதத்தில் பெண்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். உண்ணாவிரதிகளுக்கு இறுதியில் பிஸ்கற்றும் குளிர்பானமும் வழங்கப்பட்டது. [வா]

## குடாநாட்டில் இன்றைய உண்ணாவிரதப் போராட்டம்

### கரவெட்டியில்

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூகநிலையத்தினர் இன்று உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

பூஸா, வெலிக்கடை சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக நடத்தப்படும் இந்த உண்ணாவிரதம், நிலைய முன்றலில் காலை 8 மணியளவில் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு முடிவடையும். (ரா)

### தீவுப்பகுதியில்

ஊற்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை, சரவணை வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில், பூஸாவிலும், வெலிக்கடையிலும் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவுதெரிவித்து ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்க நாளை திங்கட்கிழமை 29 ம் திகதி ஏற்பாடாகியுள்ளது.

சரவணை பாரதி சனசமூக நிலையம், நாரந்தனை ஸ்ரீ முருகன் சனசமூகநிலையம், வேலணை பொதுக்கள் போன்ற பல ஸ்தாபனங்கள் இவ் உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்துள்ளன.

### பளையில்

பளை, திங்கள்

வெலிக்கடைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழர்களுக்கு ஆதரவாக பளைசந்தைமைதானத்தில் இன்று உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

### கந்தர்மடத்தில்

யாழ்ப்பாணம், திங்

பூஸாமுகாமிலும், வெலிக்கடைச்சிறையிலும் தமக்கெதிரான கொடுமைகளை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ்க்கைதிகளுக்கு ஆதரவாக, கந்தர்மடம் ஞானஜோதி சனசமூக நிலையம் இன்று ஒருநாள் உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொள்ளவிள்ளது.

## அரசியல்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காண்பிக்கப்படும் என்றும் தொலைக்காட்சி மையதயாரிப்பாளர் தெரிவித்துள்ளார். (மா)

## வெலிக்கடை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாளாகச் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கிறார்கள்.

''சிறிலங்கா அரசின் பிரசார சாதனங்கள் இப்போராட்டத்தை வழமைபோல் மூடிமறைத்துவருகின்றன. சிறைகளில் நடக்கும் வதைகள், கொலைகள் வெளியே தெரிவதில்லை. இந்நிலையில் சிறையில் போராட்டம் நடத்திவரும் எமது மக்கள் தமது போராட்டத்திற்கு ஆதரவாக எம்மைப் போராட்டங்களை நடத்தி உலகிலுள்ள மனித நேயமிக்க மக்களுக்குத் தெரியப்படுத்தும்படியும் கோரியுள்ளனர்.

''யார் இந்த வதை முகாம் உண்ணாவிரதிகள்? எமது மக்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப் புறப்பட்ட மைந்தர்கள் தான் இவர்கள். இவர்கள் கேட்பதெல்லாம் தமது அடிப்படைத்தேவைகளான உணவு, தண்ணீர், மருத்துவ வசதிகளே'

''இதற்காக வதைகளுக்கும் கொலைகளுக்கும் சர்வதேச ரீதியில் புகழ்வாய்ந்த வெலிக்கடையிலும் பூஸாவிலும் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர்,

''இவ்வதைமுகாம்போராட்டத்தை மேலும் பலப்படுத்தி சர்வதேசமயப்படுத்தும் நோக்குடன் மாணவர்களாகிய நாமும், தமிழ்பேசும் மக்களும் இப்போராட்டத்துடன் இணைந்து செயற்படவேண்டியது வரலாற்றுக் கடமை ஆகும்.

''இதனடிப்படையில் நாளை 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மாணவர்களாகிய நாமும், தமிழ் பேசும் மக்களும் சுயமாக சிந்தித்து இணைந்து போராடுவோம்.

''மேற்படி ஊர்வலம் உரும்பிராய் சந்தியிலிருந்தும் பெருமாள் கோயிலடியிலிருந்தும் ஆரம்பமாகும்.

''இவ்வூர்வலத்தில் கலந்துகொள்வோர் தமக்கு அண்மித்துள்ள மேற்குறிப்பிட்ட ஆரம்ப இடங்களில் இணைந்து கொள்ளவும்.

பெருமாள் கோவிலில் ஆரம்பமாகும் ஊர்வலம் பருத்தித்துறை வீதி வழியாகச் சென்று உரும்பிராயிலிருந்து பலாலி வீதி வழியாகவரும் ஊர்வலத்துடன் திருநெல்வேலிச் சந்தியில் இணைந்துகொள்ளும். (மா)

## ராணுவத்தினர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினரிடமிருந்து 2 அங்குல மோட்டார் ஷெல்கள் சில எம்மவர்களால் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தினரின் சேதவிபரங்கள் தெரியவில்லை''. [மா]

## மூதூரில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டியே வைக்கப்பட்டிருந்த (பூபிடிராப்) சூழ்ச்சிப் பொறியினை சில இராணுவத்தினர் தூக்கினர் அப்போது அது வெடித்ததில் ஸ்தலத்திலேயே 3 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். [மா]

## பாடசாலைகளில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாகஅவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;-

''ஸ்ரீலங்கா சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் நீதிகோரி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழருக்கு இ. த. ஆ. சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

''இன்று பாடசாலைகளில் நடத்தப்படவிருக்கும்ஒருமணி நேர பிரார்த்தனையை அடுத்து மேலும் சில போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்'' (வா)

## மின்விநியோகம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளதைத் தொடர்ந்து அம்முகாம்களுக்குத் தொடர்ச்சியான நெருக்கடிகளைக் கொடுத்துப் பின்வாங்கச்செய்யும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். இம்முயற்சியில் ஒன்றாக கடந்த 27ம் திகதி காரைநகர் கடற்படை முகாமிற்கான மின் விநியோகத்தைத் துண்டித்துள்ளோம். இதனால் படையினர் தமக்கான மின் தேவையைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறான நெருக்டிகள் மேலும் தொடரும்''.

இவ்வாறு அவ்வறிக்கை கூறுகிறது. [வா]

## இன்று

யாழ்ப்பாணம், திங்.

பாஷையூர் மகேந்திரபுரத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற புனித மிக்கேல் ஆலய திறப்பு விழா இன்று 29-ம் திகதிமாலை நடைபெறும்.

பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு ஏ. பிரான்சிஸ் அடிகள் புனித மிக்கேலின் சொரூபத்தை ஆலயத்தில் வைத்து பிரதிஷ்டை செய்வார். [ச]

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கதிரவேலு

திருமதி செல்லம்மா கதிரவேலு காலமாகி விட்டார். இவர் வேலணையை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது நல்லூர் சட்டநாதர் வீதியில் வசிக்கும் கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும். தனபாலசிங்கம் (அரச மரக்கூட்டுத்தாபனம் முன்னாள் ஒப்பந்தக்காரர்) நவரெத்தினம் (பிரதம பாமசிஸ்ட், கொழும்பு), கோபால் (விஜிகோ மரத்தொழிலக உரிமையாளர்) வசந்தகோகிலம், அன்னலட்சுமி (உலகவங்கி மேற்கு ஆபிரிக்கா), மலர்மகள், தேவி ஆகியோரின் அன்புத்தாயாரும் சண்முகலிங்கம் [உரிமையாளர் பிரவுண்ஸ் யாழ்ப்பாணம், குரூசறீஸ், கொழும்பு) கிருஷ்ணகுமார் (உலகவங்கி மேற்கு ஆபிரிக்கா) V காசிலிங்கம் (உரிமையாளர் காகோ மரத்தொழிலகம் நல்லூர்) இரவீந்திரன் (உரிமையாளர்) (வைத்திலிங்கம் மரத்தொழிலகம் திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி ஞானம்பிகை தனபாலசிங்கம், திருமதி மனோன்மணி நவரெத்தினம். திருமதி விஜயாம்பாள் கோபால், கௌரி, கண்ணன் Germany) கரிகரன், கமலகரன், சதீஸ்கரன், சதிஸ்குமார் (சுவிற்சலாந்து] நந்தினி, கிருஷாந்தினி, துர்க்கா, கார்த்திக். ஜனார்த்திக், மதுகோ பிரணவன், பிரதீப், ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-9-86) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு சட்டநாதர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் செம்மணி மயானத்தில் நடைபெறும். தயவு செய்து இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உரிமையாளர், காகோ மரக்காலை, நல்லூர். (C-4904]

### நா. முருகேசு

(உரும்பராய்)

மாதகலை பிறப்பிடமாகவும், உரும்பராயைவசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை முருகேசு (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) 28-9-86 அன்று காலமாகி விட்டார் அன்னார் உரும்பராய் காலஞ்சென்ற சிவகுரு சங்கரப்பிள்ளையின் மகள் தவமணியின் அன்புக் கணவரும், நந்தகுமார் (கட்டிடத்திணைக்களம் யாழ்ப்பாணம்), சாந்தகுமார் [பொலிஸ் நிலையம் கிளிநொச்சி], ஆனந்தகுமார், [S.K. சமகோன் கைதடி] சாந்தராணி, கமலராணி (குவைத்], யோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம் (இயக்குனர் மனோகரா தியேட்டர்], சிவஞானசக்தி, அமிர்தராணி திலகவதி ஆகியோரின் அன்பு மாமனாரு, முகுந்தன், விமலகுமார், மோகனகாந், சுதர்சனன், கிரிசாந்தி, ஷமிலா, பவானந்தி, நிலானி, சுகன்யா, ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (30-9-86) காலை 9-00 மணியளவில் இளங்காடு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

யோகவாசா, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

[C 4905]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126